விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 235 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 26 வியாழக்கிழமை (11.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே


# உச்ச கொதிநிலையில் சீன கப்பல் விவகாரம்

## இலங்கைக்கு உளவு விமானம் வழங்கவுள்ள இந்தியா

(கொழும்பு)

சீனாவின் ஆய்வுக் கப்பலானது இன்று அம்பாந் தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் குறித்த விடயமானது கடும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)



## இன்று, ஞாயிறு மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

நாட்டில் இன்று மின் வெட்டு அமுல்படுத் தப்பட மாட்டாது என 11

## கொரோனா 9 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் 11

## 22வது திருத்தச்சட்டம்

### பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கடந்த வாரம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

2022ஆம் ஆண்டுக்கான, 2021ஆம் ஆண்டுக்கான முன்கூட்டிய ஒதுக்கீட்டுச் சட்டம் தொடர்பான திருத்தச் சட்டமூலம் நேற்று முன்தின அமர்வின் 11

## அனைவருக்கும் நியாயமான நிர்வாகக் கட்டமைப்பு அமைக்கப்படும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து தரப்பினருக்கும் நியாயமான பிரதிநிதித்துவத்துடன் கூடிய ஆட்சிக் கட்டமைப்பை அமைப்பதே தமது நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



### ஜனாதிபதி ரணில் தலைமையில்

## நாடு செல்லும் திசை மிகவும் தெளிவானது

### அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா

(கொழும்பு)

"இலங்கையில் சர்வஜன வாக் கெடுப்பு அல்லது தேர்தல் ஒன்றை நடத்தினால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள், சிறப்பான தலைமைத் 11

## ரணில் வீட்டுக்கு தீ வைப்பு

### 205 மில்லியன் ரூபாய் நட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் 11

## பாராளுமன்றத்துக்குள் ஒரு சட்டம் மக்களுக்கு வேறொரு சட்டமா?

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்குள் ஒரு சட்டமும் நாட்டு மக்களுக்கு வேறு சட்டமும் நடைமுறையில் உள்ளதா? என்பதை சபாநாயகர் உடனடியாக தெளிவுபடுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரினார். 11



## கொக்குவில் எரிபொருள் நிலையத்தில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் எரிபொருள் நிரப்பச் சென்ற ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். 11

### இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வந்த

## 12 அபிவிருத்தி திட்டங்களை ஜப்பான் நிறுத்தியுள்ளது

### சபையில் அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா

(கொழும்பு)

ஜப்பானிய சர்வதேச நிதியமான ஜெய்க்கா, இலங்கையில் நிதியளித்து வந்த 12 திட்டங்களுக்கான தமது நிதியளிப்பை நிறுத்தியுள்ள 11



## இலங்கை நுழையும் சீன ஆய்வுக் கப்பல்

### இந்திய உயர்ஸ்தானிகராலயம் கருத்துக்கூற மறுப்பு

(கொழும்பு)

சீனாவின் அதி தொழில்நுட்ப ஆய்வுக் கப்பல் Yuan Wang 5 தொடர் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சட்டத்தை நடைமுறைப்படுத்தாது ஜனநாயகத்தை முன்னெடுக்க முடியாது

## சபையில் பிரதமர் தினேஷ் குணவர்தன



**(கொழும்பு)**

**சட்டம் மற்றும் ஒழுங்கை நடைமுறைப்படுத்தாமல் ஜனநாயக சமூகம் ஒன்றுக்கு முன்நோக்கிச் செல்ல முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் குரலுக்கு செவிமடுப்பது போலவே அண்மையில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்குக்கு அமைய நடவடிக்கை எடுக்க நேரிடும். அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு செல்ல வேண்டும் என ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

நாட்டின் அரசியல் கட்சிகள் என்ற வகையில் தற்போதைய சவாலுக்கு மத்தியில் ஜனநாயக முறைக்கு அமைய செல்ல வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது.

நாட்டில், சட்டம் மற்றும் ஒழுங்கை நிலை நாட்டும் போது சிலருக்கு ஏற்றுக் கொள்ள முடியாத் கஷ்டங்களை உணரலாம். எனினும் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலை நாட்டாது ஜனநாயக சமூகம் ஒன்று முன்நோக்கி செல்ல முடியாது.

அண்மைய காலத்தில் உருவான மக்களின் குரல்களுக்கு செவிசாய்க்க வேண்டும். பொது அழிப்பை ஏற்படுத்தும் கொடூரங்களுக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு மூலம் நடவடிக்கை எடுப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள நேரிடும் எனவும் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். (ம-7)

## எதிர்வரும் 21 ஆம் திகதி புதிய கூட்டணியின் பெயர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 10 சுயேட்சைக் கட்சிகளின் புதிய கூட்டணியின் பெயர் எதிர்வரும் 21 ஆம் திகதி வெளியிடப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குறித்த கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, சர்வகட்சி அரசாங்கம் அமைச்சுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் அல்ல. மாறாக இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து அனைவரும் வெளியேறக் கூடிய ஒரு திட்டத்தை அமைப்பதன் மூலம் உருவாக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். (ம-7)

## மகிந்த, பசில் மீதான பயணத்தடை நீடிப்பு

மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நீடித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்த உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை நேற்று இரண்டாவது நாளாக பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (ம-7)


### வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### VADAMARADCHI EAST PALM DEVELOPMENT CO-OPERATIVE SOCIETY(LTD)

பதிவு இலக்கமும் திகதியும் : N.J/ 64-28.06.2004
மருதங்கேணி

### அறிவித்தல்
### பகிரங்க மூடிய கூறுவிலை

- வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்குச் சொந்தமான உழவியந்திரம் அதன் இழுவைப்பெட்டி என்பன மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.
- மூடிய கூறுவிலை மூலம் விற்பனைக்கு விடப்படும் வாகனத்திற்கான விண்ணப்ப படிவத்தினைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 500/=(ஐந்நூறு) செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். இப் பணம் மீளளிக்கப்படமாட்டாது..
- மேற்கூறிய வாகனத்தினை மருதங்கேணி தெற்கு, தாளையடியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.
- பார்வையிடும் நேரம் 11.08.2022 ஆம் திகதி தொடக்கம் 25.08.2022 ஆம் திகதி வரையும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், வடமராட்சி கிழக்குப் ப.தெ.வ. அ.கூ.சங்கம், மருதங்கேணி தெற்கு எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உழவு இயந்திரம், இழுவைப்பெட்டி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.
- இம் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பம் 11.08.2022 ஆம் திகதி தொடக்கம் 25.08.2022 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். வாகனங்களுக்கான மூடிய கூறுவிலை 03.09.2022 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.
- உழவியந்திரத்தினையும், இழுவைப்பெட்டியினையும் கூறுவிலையின்படி பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே கூறுவிலையில் குறிப்பிடப்படும் பணத்தினை முழுமையாக செலுத்தி உழவியந்திரத்தினையும், இழுவைப்பெட்டியினையும் கொண்டு செல்லுதல் வேண்டும்.
- ஆரம்ப விலை : உழவியந்திரம் - ரூபா 500,000.00 (ஐந்து இலட்சம்)
  இழுவைப்பெட்டி - ரூபா 300,000.00 (மூன்று இலட்சம்)
- கூறுவிலைகள் தனித்தனி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும். (C-4725)

தலைவர்,
வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
மருதங்கேணி.

தொலைபேசி இலக்கம் :
021 226 0520



### யாழ்ப்பாணம் மாநகர சபை
### நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2022

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக் கட்டணம் : ரூபா 1,000.00
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- 11.08.2022 பி.ப 12.30 தொடக்கம் 16.08.2022 பி.ப 12.30 மணி வரை (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி :- 16.08.2022 பி.ப 12.30 மணி வரை
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- 17.08.2022 முற்பகல் 10.00 மணிவரை
- கேள்விப்படிவம் திறத்தல் :- 17.08.2022 முற்பகல் 10.00 மணிக்கு
- தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 2,000.00 மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(C-4724)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாஃப்ஸ் காஸ் விலையும் விரைவில் குறையும்

(கொழும்பு)

லாஃப்ஸ் காஸ் நிறுவனம் எதிர்காலத்தில் உள்நாட்டு எரிவாயு கொள்கலன்களின் விலையை குறைக்க உள்ளதாக அறிவித்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த இரு தினங்களுக்கு முன்னர் லிட்ரோ காஸ் நிறுவனம் எரிவாயுவின் விலையை குறைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கையில் பரவும் புதிய திரிபு

# நுரையீரலை அதிகம் சேதப்படுத்தும்

## அமெரிக்க மருத்துவர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் தற்போது பரவி வரும் B.A4 மற்றும் B.A5 கொவிட் மாறுபாடு நுரையீரலை அதிகளவில் சேதப்படுத்துவதாக அமெரிக்காவில் உள்ள ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் வளவாளர் மருத்துவர் சஞ்சய் பெரேரா தெரிவித்துள்ளார்.**

அதன்படி ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவிலும் இவ்வகையான கொவிட் மாறுபாடு மிக வேகமாகப் பரவி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஆறு பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும், நாட்டில் நேற்று முன்தினம் 214 பேர் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தபால் கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் தபால் கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட உள்ளது.

இதன்படி 15 ரூபாவாக உள்ள சாதாரண கடிதத்திற்கான தபால் கட்டணம் 50 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதிவு செய்யப்பட்ட தபால் கட்டணம் 45 ரூபாவில் இருந்து 110 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன் 250 கிராம் எடையுள்ள பொருட்களுக்கான சரக்கு கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கைக்கு வரும் பாகிஸ்தான் போர்க்கப்பல்

## மீண்டும் சர்ச்சை

(கொழும்பு)

சீன இராணுவக் கப்பல் தொடர்பாக சர்ச்சை ஏற்பட்ட நிலையில், தற்போது இலங்கை வரும் பாகிஸ்தான் ஏவுகணை போர்க்கப்பல் தொடர்பாக கரிசனை வெளியிட்டு இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் கடற்படைக்கு சொந்தமான தைமூர் என்ற ஏவுகணை போர்க்கப்பலுக்கு கொழும்புத்துறைமுகத்திற்குள் நுழைய இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியதாக கூறப்படுகின்றது.

கம்போடிய மற்றும் மலேசிய கடற்படையினருடனான இராணுவ. பயிற்சியின் பின்னர் சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த போர்க்கப்பல் பாகிஸ்தானுக்கான தனது முதல் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது.

அதன்படி, இந்த ஏவுகணை போர்க்கப்பல் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை கொழும்புத்துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்குங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

(கொழும்பு)

உடன் நடைமுறைக்கு வரும் வகையில், அவசர கால சட்டத்தை நீக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஜனநாயகத்தை நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கட்டண உயர்வால் மின்பாவனை குறையும்

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதங்களில் இலங்கையின் மின்சார பாவனை 25 வீதத்தால் குறைந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மின் வெட்டு காரணமாக 7 வீதமும் இந்த நாட்களில் வெப்பநிலை குறைந்துள்ளதால் 15 வீதமும் மின் பாவனை குறைந்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் மின்சாரக் கட்டண அதிகரிப்பினால் மின்சார பாவனை குறையும் என்று தெரிவித்துள்ளார். (நி)

## கோட்டா கோ கம நூலகம் இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடல் கோட்டா கோ கமவில் அமைக்கப்பட்ட நூலகம் நேற்று அதிகாலை இடம் மாற்றப்பட்டுள்ளது.

குறித்த நூலகம் பாணந்துறையிலுள்ள விகாரை ஒன்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளது. அத்தோடு, 'கோட்டா கோ கம' என்ற பெயரில் இது தொடர்ந்தும் இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# தாய்லாந்து செல்கிறார் கோட்டாபய ராஜபக்ஷ

(மாலைதீவு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தென் கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்துக்கு செல்லவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

போராட்டத்தை அடுத்து இலங்கையில் இருந்து வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவு வழியாக சிங்கப்பூருக்கு சென்றிருந்தார்.



இந்நிலையில் சிங்கப்பூரில் இருந்து இன்று தாய்லாந்து செல்வார் என எதிர்பார்க்கப்படுவதாக ஆதாரங்களை மேற்கோளிட்டு ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

# காலிமுகத்திடல் போராட்டத்தில் இருந்து விலகுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

காலிமுகத்திடல் போராட்டத்தினை இன்றுடன் முடிவுக்கு கொண்டுவரவுள்ளதாக போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

தென்னிலங்கை அரசியலில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்த காலிமுகத்திடல் போராட்டம் நேற்று முன்தினம் பெருமளவானோர் பங்கேற்பின்றி சோபை இழந்து காணப்பட்டது.



இதனிடையே, அரசாங்கம் போராட்டக்காரர்களை கைது செய்தும் விசாரணைகளுக்கு உட்படுத்தியும் வரும் சூழலில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சூடு பிடிக்கும் சீனக்கப்பல் விவகாரம் பின்னணியில் காய் நகர்த்தும் ராஜபக்ஷக்கள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள விடயமாக சீனக் கப்பல் மாறியுள்ளதன் பின்னணியில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் இருப்பதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய சீனக் கப்பல் தொடர்பில் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் தலையீட்டின் பின்னணியில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இருப்பதாக அந்த கட்சியின் தலைவர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

சீனக் கப்பல் விவகாரத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் தலையிட்டு சீனாவின் நல்லெண்ணத்தை பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டால் அதனை இரு நாடுகளும் இணைந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். வேறு தரப்பினர் தலையிட வேண்டிய அவசியமில்லை.

அணிசேரா கொள்கையின் படி இலங்கை செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# நாட்டிற்கு வருகை தரும் கச்சா எண்ணெய் கப்பல்

(கொழும்பு)

கச்சா எண்ணெய் கப்பல் ஒன்று நாளை மறுதினம் நாட்டை வந்தடையும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கச்சா எண்ணெய் கப்பல் வந்ததன் பின்னர் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் இயங்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துரலியே ரத்ன தேரரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022

# கால் இறுதி முன் போட்டிக்கு கே.சி.சி.சி.அணி தகுதி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 29 ஆவது தகுதி காண் போட்டியில் கே.சி.சி.சி. அணி, ஹாட்லியை யிற்ஸ் அணியை 149 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதி முன் போட்டிக்கு (PRE QUARTER FINALS) தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 274 ஓட்டங்களை பெற்றுள்ளது.

பானுஜன்-61, பிரதீஸ்-58, சத்யன்-38, நிமலதாஸ் ஆட்டமிழக்காது 36, பிரவீன்-24, துஸ்யந்தன்-22 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் ஹாட்லியையிற்ஸ் அணியைச் சார்ந்த செயோன் 10 ஓவர்களில் 68 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் சிறிராம் 8 ஓவர்களில் 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லியையிற்ஸ் அணி 36.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை பெற்றுள்ளனர். ஜீவபிரகாஸ்-33, கிரிதரன்-33 ஓட்டங்களை பெற்றுள்ளனர். பந்து வீச்சில் கே.சி.சி.சி. அணியைச் சார்ந்த நிரூசிகன் 10 ஓவர்களில் 18 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் நிமலதாஸ் 5 ஓவர்களில் 17 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், சாம்பவன் 7 ஓவர்களில் 28 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 13 ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு (RATING) கே.சி.சி.சி. அணி 10.23 புள்ளிகளையும் ஹாட்லியையிற்ஸ் அணி 2.15 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

## கிராஸ்கொப்பர்ஸ் அணியை வீழ்த்தியது யாழ்.ஜொனியன்ஸ்



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட நிகழ்வு 50 ஓவர் கொண்ட தொடரில் யாழ். ஜொனியன்ஸ் அணி, கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 3 விக்கெட்டுக்களால் வெற்று பெற்று கால் இறுதி முன்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 48.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களை பெற்றனர். அகிலன்-78, அபிநாத்-37, கிஷாந்துஜன்-29, சன்சயன்-28, ரட்ணம்-26, லவேந்திரா ஆட்டமிழக்காது 24, கானாமிர்தன்-20 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை சேர்ந்த ஜெனன்தன் 10 ஓவர்களில் 64 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மதுஸன் 9 ஓவர்களில் 45 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 47.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 277 ஓட்டங்களை பெற்றது. ஜெனன்தன்-78, அஜித்-51, வரலக்ஸன்-39, ரசிகரன்-29, சுஜீவன்-23 ஓட்டங்களை பெற்றுள்ளனர். பந்து வீச்சில் யாழ். ஜொனியன்ஸ் அணி சார்பாக அகிலன் 8 ஓவர்களில் 43 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சன்சயன் 10 ஓவர்களில் 60 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் திஸாந்துஜன் 9 ஓவர்களில் 64 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம், யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 13 ஆண்டுகளாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு (RATING) யாழ். ஜொனியன்ஸ் அணி 9.11 புள்ளிகளையும், கிறாஸ்கொப்பர்ஸ் அணி 3.47 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2683


### அனிஸ்

தாயாய், மனைவியாய், சகோதரியாய், தோழியாய், மகளாய்



யாரோ ஒரு பெண்ணின் அன்பில்லாமல் ஆணால் வாழவே முடியாது.

### பிரவின்



உறவுகளை தேடுவதை
அடியோடு நிறுத்திக் கொண்டேன்.
உள்ளம் கேட்கிறது
இதுவரை பட்டது போதாதா? என்று.

### நிருக்ஷி




### சுஷ்மிதா

மகன்: அம்மா தூக்கமே வரல ஒரு கதை சொல்லுமா
அம்மா: கண்ணா எனக்கும் தூக்கமே வரல, உங்க அப்பனும் இன்னும் வரல



வரட்டும் ஏன் லேட்டுனு கேப்போம், அப்புறம் பாரு உங்க அப்பன் எத்தனை கதை சொல்லுவார் என்று

### தயா

ஒரு நிமிடம் கூட மொபைல் போனை சுவிட்ச் ஒப் செய்யாமல் இருப்பவன் காதலில் விழுந்தவன்.



நிமிடத்திற்கு ஒரு முறை சுவிட்சி ஒப் செய்பவன் கடனில் விழுந்தவன்.

### அனோஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையின் தேவைக்காக இரணைதீவில் நில அளவீடு

(அக்கராயன்)

**கிளிநொச்சி பூநகரி இரணைதீவில் கடற்படையின ருக்கான நில அளவீடு நேற்று நடைபெற்றுள்ளதாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்த தாவது. மடுத் தேவாலயத்திற்கு இரணைதீவில் இருந்து மக்கள் நேற்று சென்றுள்ளதைப் பயன் படுத்தி நில அளவைத்திணை க்களம் கடற்படையினருக்கான காணி அளவீட்டில் ஈடுபட்டு ள்ளது.

இரணைதீவில் இதுவரை மக்களுக்கான மீள் குடியேற்றம் நடைபெறவில்லை.

இரணை தீவில் தங்கி உள்ள மக்கள் மடுத்தேவா லயத்திற்கு நேற்று சென்று ள்ளதைப் பயன்படுத்தி நில அளவைத் திணைக்கள அதி காரிகளினால் கடற்படையின ருக்கான மூன்றரை ஏக்கருக் கான நில அளவீடு நடைபெற்று ள்ளது எனத் தெரிவித் தார். (4-350)

## நினைவுப்பகிர்வு

(கொழும்பு)

சமீபத்தில் அமரத்துவம் அடை ந்த கலைஞர்களின் நினைவுப் பகிர்தல் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி 4 மணிக்கு கொழு ம்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

அமரத்துவம் அடைந்த கலை ஞர்களான எழுத்தாளர் மயிலா ங்கூடல் பி.நடராசா, கதை சொல்லி மாஸ்டர் சிவலிங்கம், கல்வியா ளர் ஆர்.எஸ். நடராசா, எழுத் தாளர் தெணியான் - கந்தையா நடேசு ஆகியோர்களின் அஞ்சலி உரையை முறையே எழுத்தா ளர் இராஜி கெங்காதரன், எழுத் தாளர் வசந்தி தயாபரன், பேராசி ரியர் தை.தனராஜ், மருத்துவ கலாநிதி.ச.முருகானந்தம் ஆகி யோர் ஆற்ற உள்ளனர். (4)

### குழப்பங்களை தவிர்க்கவே

# எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாலையுடன் மூடப்படுகின்றன

## யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரவு வேளைகளில் குழப்பங்கள், விரும்பத்தகாத செயல்கள் இடம்பெறுவதால் மாலை வேளையுடன் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலைய ங்கள் மூடப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இயங் கும் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாலை வேளையுடன் மூடப்படுகின் றன. இந்நிலையில் இது தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கடந்த வாரம் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையா ளர்களுடன் கலந்துரையாடல் களை மேற்கொண்டிருந்தேன். இதன்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாலை வேளைகளில் மதுபோதையில் கூடுபவர்கள் , கறுப்புச் சந்தை வியாபாரிகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங் களை ஏற்படுத்துவதுடன் விரு ம்பத்தகாத செயல்களிலும் ஈடு படுகின்றனர். இதனால், எரி பொருள் நிரப்பு நிலைய ஊழி யர்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகிறது. ஆகவே, தாம் மாலை வேளையுடன் எரி பொருள் நிரப்பு நிலையங் களை மூடுவதாக உரிமை யாளர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர், அப்பகுதிப் பிரதேச செயலர் ஆகியோரின் முடிவின் பிரகாரம் மாலை வேளையுடன் மூடுவதா? இல் லையா? என முடிவெடுக்கப்ப டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (4-18)



கரணவாய் மூத்த விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. (படம்-மகாலிங்கம்)

# திருடப்பட்ட உழவு இயந்திரம் நேற்று மீட்கப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் களவாட ப்பட்ட உழவு இயந்திரம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பெற்றுக் கொள் வதற்காக கிளிநொச்சி பரந்தன் நகரப்பகுதியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் இனம் தெரி யாதோரால் கடந்த 7 ஆம் திகதி கடத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் உழவு இயந்திரத்தின் உரிமையாளர் பல இடங்களில் தேடியதுடன் பொலிஸில் முறைப்பாடு செய்தி ருந்தார்.

இந்த நிலையில் நேற்று விசுவமடு புன்னை நீராவி பகுதியில் அமைந்துள்ள இரா ணுவ முகாமிற்கு அருகாமை யில் வீதி ஓரமாக குறித்த உழவு இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் பொது மக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

உழவுயிந்திரத்தில் பல உதிரிப்பாகங்கள் திருடப்பட் டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலி ஸார் மற்றும் தடையவியல் பொலிஸார் விரிவான விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-100-316)

# அத்துமீறிய நபர்களால் பயன்தரு மரங்கள் அழிப்பு

### பொலிஸில் முறைப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியில் இனந் தெரியாத நபர்கள் அத்துமீறி பயன்தரும் மரங்களை அழித்துள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி காணி உரிமையாளர் இல் லாத சமயத்தில் அத்துமீறி அடாத்தாக 40 இற்கும் மேற் பட்ட தென்னை மரங்களும் 261 கமுகம் மரங்களும் மாமரங்கள் என பல பயன் தரு மரங்கள் அழிக்கப்பட்டு ள்ளன.

இந்த விடயம் தொடர்பில் நேரடி விசாரணை மற்றும் களஆய்வினை தருமபுரம் பொலிஸ் நிலைய பொறு ப்பதிகாரி, குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி, இராமநாத புரம் பொலிஸ் நிலைய பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-272)

# மடுத்தேவாலயத்திற்கு செல்ல பேருந்து வசதியை ஏற்படுத்துங்கள்

### பூநகரி பிரதேசசபை செயலாளர்

(அக்கராயன்)

மடுத்தேவாலயத்திற்கு பக் தர்கள் சென்று வர பேருந்து சேவை செய்து தருமாறு இல ங்கை போக்குவரத்து சபையின் பிரதான பிராந்திய முகாமை யாளருக்கு பூநகரி பிரதேச சபையின் செயலாளர் க.கம்ச நாதன் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்க ப்பட்டுள்ளதாவது. மடுத்தேவா லயத்தின பெருவிழா நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள் ளது.

பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் வலைப்பாடு, கிரா ஞ்சி, வேரவில், முழங்காவில், குமுழமுனை, ஜெயபுரம், இர ணைமாதாநகர் என எமது ஆளுகைக்குட்பட்ட பிரதேச த்தில் இருந்து பல கிராமங் களில் இருந்து மடுத்தேவா லயத்திற்கு வருடாவருடம் சென்று வருகின்றார்கள்.

இவ் வருடம் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டு ப்பாடு காரணமாக எரிபொருள் விலையேற்றம், ஏனைய பொரு ட்களின் விலையேற்றங்கள் எனப் பல்வேறுபட்ட பொருளா தார நெருக்கடியினால் மடுத் தேவாலயத்திற்கு மக்கள் சென்று வருவதில் ,தமது நேர் த்திகளை நிறைவேற்றுவதில் தடைகள் காணப்படுகின் றன.

இந்நிலையில் இருந்து விடுவித்து பொதுப் போக்கு வரத்து மூலமாக மடுத்தேவா லயத்திற்கு சென்று வருவதற் கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என அதில் தெரி விக்கப்பட்டுள்ளது. (4-350)

# கிளிநொச்சியில் போராட்டம்



(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி 100 நாட்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தின் 10வது நாள் போராட்டம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி தருமபுரம் பகு தியில் குறித்த போராட்டம் நேற்று காலை இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் கிராம அடிப்படை அமைப்புக்கள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் மற்றும் மாணவர் அமைப்புக்கள், சிவில் அமை ப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (4-100-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியங்காடு செங்குந்தா

# சந்தை வியாபாரிகள் போராட்டம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு செங்குந்தா சந்தை வியாபாரிகள் நேற்று புதன்கிழமை காலை போராட்டத்தில் ஈடுபட்டதுடன், யாழ்ப்பாணம் மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை மற்றும் கோப்பாய் பொலிஸார் ஆகியோருக்கு மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட செங்குந்தா சந்தையில் மரக்கறி வியாபாரத்தினை மேற்கொள்ளும் வியாபாரிகளே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சந்தைக்கு வெளியே சந்தை சுற்றுவட்ட பகுதிகளில் உள்ள பலசரக்குக் கடைகளில் முன்னெடுக்கப்படும் மரக்கறி வியாபாரத்தைத் தடை செய்யக் கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் மேற்படி சந்தை வியாபாரிகள் தெரிவிக்கையில்,

சந்தைக்கு வெளியே உள்ள பலசரக்கு கடைகளில் மரக்கறி வியாபாரம் இடம்பெறுவதால் சந்தைக்குள் வந்து மக்கள் மரக்கறியினைக் கொள்வனவு செய்யாமல் வீதி ஓரமாக இருக்கும் பலசரக்கு கடைகளில் மரக்கறியினை கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றனர்.

அத்துடன் வீதியோரக் கடைகளில் மரக்கறி கொள்வனவுக்காக வருவோர் தமது வாகனங்களை வீதிகளில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன.

எமது வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் சந்தைக்கு வெளியே உள்ள கடைகளில் மரக்கறி வியாபாரம் இடம்பெறுவதால் எமது சந்தை சுற்று வட்டாரத்தில் உள்ள யாழ்.மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றின் ஆளுகைக்குள் உள்ள கடைகளில் மரக்கறி வியாபாரத்தை தடை செய்ய கோரி இரு சபைகளிடமும் மகஜர் கையளித்துள்ளோம் எனத் தெரிவித்தனர். (4-18-33-104)

## யாழ். மாவட்டச் செயலகத்தில்

# அறுவடை நிகழ்வு



(குப்பிழான்)

வீட்டுத் தோட்டங்களில் விவசாய உற்பத்தியை அதிகரித்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேலதிகமாக அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களிலும் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் யாழ். மாவட்டச் செயலக விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கத்தரி, மிளகாய் மற்றும் தக்காளி ஆகிய மரக்கறி நாற்றுக்கள் நாட்டப்பட்டு அதன் அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை யாழ்.மாவட்டச் செயலக வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது. (4-18)

## அளவெட்டி நாகவரத நாராயணருக்கு

# இன்று கொடியேற்றம்

(குப்பிழான்)

சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்தும் பதினொரு தினங்கள் இவ்வாலய மஹோற்சவம் இடம்பெறும். இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இரவு7 மணிக்குச் சப்பரத் திருவிழாவும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் அன்றையதினம் மாலை 6.30 மணிக்கு உறியடி உற்சவமும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ ரங்கநாதர் பாத பூசையும் அன்றையதினம் முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (4-18)

# வீணை மைந்தனின் பவளவிழா



யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் மூத்த எழுத்தாளர் வீணை மைந்தன் கே.ரி. சண்முகராஜாவின் பவள விழா நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி மேற்படி இலக்கிய வட்டத்தின் தலைவரும் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர். கலாநிதி. என்.சண்முகலிங்கன் தலைமையில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. (4)

# மருத்துவமனை வருவோருக்கு தடுப்பூசி அட்டை கட்டாயம்

(சாவகச்சேரி)

கொரோனா தடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை மீண்டும் ஏற்பட்டிருப்பதாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் திருமதி.டயாழினி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

மீண்டும் கொரோனா வைரஸ் பல திரிபுகளாக மாற்றமடைந்து வருகிறது.எனவே அதிலிருந்து தப்பிக்கும் முகமாக 60வயதிற்கு மேற்பட்டவர்கள், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் நான்காவது தடுப்பூசியான பூஸ்டர் டோஸினை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கிளினிக், வேறு சிகிச்சைகளுக்காக வருபவர்கள் கொரோனா தடுப்பூசி அட்டையுடன் வருகை தர வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-30)

## அரச உத்தியோகத்தர்களுக்கான

# காஸ் விநியாகத்திற்கும் மாவட்ட செயலகத்திற்கும் தொடர்பு இல்லை

## யாழ்.அரச அதிபர் மகேசன்

(குப்பிழான்)

யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கான எரிவாயு விநியோகத்திற்கும், யாழ். மாவட்டச் செயலகத்திற்கும் தொடர்பு இல்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்ட 1650 எரிவாயு சிலிண்டர்களில் 1000 சிலிண்டர்களை யாழ்.மாவட்ட செயலகம் உள்ளிட்ட 21 திணைக்களங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மிகுதி 650 சிலிண்டர்களையே யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் ஊடாகப் பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது

குறித்த விடயம் பலர் மத்தியிலும் விசனத்தை ஏற்படுத்திய நிலையில் இதுதொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிவாயு சிலிண்டர் விலை குறைக்கப்படும் என அரசாங்கம் அறிவித்தமையால் சிலிண்டர்களைப் பெற்று மக்களுக்கு விநியோகிக்க நாம் விரும்பவில்லை. ஏனெனில், விலை குறைக்கப்படும் எனத் தெரியாது. பெரியளவில் விலை வீழ்ச்சி ஏற்பட்டால் அதில் ஏற்படும் நட்டத்தினை யார் மீது சுமத்துவது? என்ற பிரச்சினை இருந்தது.

இந்தநிலையில் திணைக்களங்களின் நலன்புரிச் சங்கங்கள் ஊடாகத் திணைக்களப் பணியாளர்கள் தமக்கான எரிவாயுவினைப் பெற்றுக் கொள்ளக் கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதன் அடிப்படையில் அவர்களுக்கான சிலிண்டர்களை நேற்றையதினம் தினம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இருந்த போதிலும் மாவட்டச் செயலகத்தில் விநியோகிக்க நான் அனுமதிக்கவில்லை.

ஏனைய திணைக்களங்கள் தொடர்பில் அந்த அந்தத் திணைக்களத் தலைவர்களே [illegible] வேண்டும் எனத் தெரிவித்தார். (4-18)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 320 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| தக்காளி | 400 | 360 | 370 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 200 |
| கோவா | 350 | 350 | 350 | 400 |
| கரட் | 280 | 320 | 350 | 400 |
| பூசணி | 130 | 100 | 150 | 140 |
| புடோல் | 80 | 100 | 120 | 180 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 170 | 190 | 170 |
| பாகற்காய் | 300 | 400 | 380 | 450 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 200 | 240 | 250 | 400 |
| லீக்ஸ் | 350 | 200 | 270 | 300 |
| பீற்றூட் | 120 | 250 | 140 | 150 |
| கறிமிளகாய் | 600 | 600 | 400 | 800 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 400 | 500 |
| போஞ்சி | 450 | — | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | — | 320 |
| கீரை - 1 பிடி | 150 | 90 | 80 | 150 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 40-60 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 200 | 450 |
| முள்ளங்கி | 120 | 80 | 120 | 140 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடம் கடன்பெற்று இலங்கை போல் ஆகாதீர்கள்

## வளரும் நாடுகளுக்கு பங்களாதேஷ் எச்சரிக்கை

(கொழும்பு)

**சீனாவிடம் கடனுதவி பெற்று இலங்கையை போன்று பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டாம் என்று வளர்ந்து வரும் நாடுகளுக்கு பங்களாதேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

பங்களாதேஷின் நிதியமைச்சர் ஏ.எச்.எம்.முஸ்தபா கமல், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். சீனாவின் பட்டுப் பாதை திட்ட முன்முயற்சியின் மூலம் அதிக கடன்களைப் பெறுவது பற்றி வளரும் நாடுகள் இருமுறை யோசிக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

இலங்கையில் சீன ஆதரவு உட்கட்டமைப்புத் திட்டங்கள் வருமானத்தை ஈட்டத் தவறியதாக பங்களாதேஷின் நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் சீனாவின் மீது அனைவரும் குற்றம் சுமத்துவதை.சீனா நிராகரிக்கின்ற போதும், சீனாவே இந்த நிலைமைக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் எந்தெந்த திட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் சீனா போதுமான அளவு கடுமையாக இருக்கவில்லை என்பதை அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி எடுத்துக் காட்டுகிறது.

எனவே ஒரு திட்டத்திற்கு கடன் கொடுப்பதற்கு முன் முழுமையான ஆய்வை. சீனா மேற்கொள்ள வேண்டும் என்றும் பங்களாதேஷின் நிதியமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# உணவுப் பற்றாக்குறையால் மாணவர் வருகையில் வீழ்ச்சி

## தேசிய அதிபர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்களின் வருகை 30-40 வீதம் குறைந்துள்ளதாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

உணவுப் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் பிரச்சினையே பாடசாலை மாணவர்களின் வருகை குறைவதற்கு பிரதான காரணமாக அமைவதாக தெரிய வந்துள்ளதாக இலங்கை தேசிய அதிபர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மொஹான் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால் உணவு வழங்க முடியாமல் தங்கள் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாமல், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் ஏராளமான குடும்பங்கள் உள்ளன.

ஒவ்வொரு நாளும் பாடசாலைகளின் காலைக் கூட்டங்களில் கணிசமான மாணவர்கள் மயக்கமடைகின்றனர். தகவல்களைத் தேடும் போது உணவருந்தாமல் மாணவர்கள் பாடசாலைக்கு வரும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அறுபது சதவீதமான குழந்தைகள் மதிய உணவை பாடசாலைக்கு கொண்டு வருவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துப் பிரச்சினையால் பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்படும் ஆசிரியர்களின் மன உளைச்சல் மாணவர்களையும் பாதிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

மதிய உணவு வழங்கும் பாடசாலைகளில் குழந்தைகளின் வருகை 90 வீதத்திற்கும் அதிகமாக காணப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# தேசிய விளையாட்டு பேரவையின் தலைவராக அர்ஜீன ரணதுங்க

(கொழும்பு)

தேசிய விளையாட்டு பேரவையின் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அர்ஜீன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் அர்ஜீன ரணதுங்க தேசிய விளையாட்டு பேரவையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (நி)



# விரைவில் மண்ணெண்ணெய் விநியோகம்

(கொழும்பு)

மண்ணெண்ணெய் விநியோகம் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் தொடரும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மண்ணெண்ணெய் விலையை திருத்துவது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

கச்சா எண்ணெய் கப்பல் ஒன்று நாளை மறுதினம் இலங்கைக்கு வரவுள்ளது. இரண்டாவது கப்பலும் வரும் 29 ஆம் திகதி வர உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மின் கட்டண உயர்வுக்கு பாராளுமன்றில் கண்டனம்

(கொழும்பு)

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

குறிப்பாக, மின்சார கட்டணத்தை 75 வீதத்தால் அதிகரிக்க இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL), இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, முதல் 30 அலகுகளுக்கு 264 வீதத்தாலும் 31 முதல் 60 வரையான அலகுகளுக்கு 211 வீதத்தாலும் 61 முதல் 90 வரையான அலகுகளுக்கு 125 வீதத்தாலும் மின் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

91 முதல் 120 அலகுகள் வரை 89 வீதத்தாலும் 121 முதல் 180 அலகுகள் வரையான மின்பாவனைக்கு 79 வீதத்தாலும் கட்டணம் அதிக



ரிக்கப்படவுள்ளதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இதனை ஏற்கமுடியாது. விலை அதிகரிப்பு அமுலாக முன்னர் அது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும்.

மக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர், இந்நிலையில் அவர்கள் தற்போது மின்சார கதிரையிலும் அமர்த்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 37 சூரி 3 செவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L பலசரக்குக்கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12855 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா:23 ¾ சூரி 4 செவ் 9 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: உயர்தரம் தையல் மேக்கப்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/12880 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 3<br>கி.பா: 16 சூரி 3 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc Eng. (Mechanical Engineer) சிங்கப்பூர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: B/12856 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 20 ½ சூரி. செவ் 2 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: BSc, Msc ICT Officer<br>எதிர்பார்ப்பு:அரச .தனியார் உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/12881 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 21 ½ சூரி 10 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: A/L CTB Clark<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் ஆசிரியர் விரும்பத்தக்கது உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12857 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 31 ¼ சூரி 5 செவ் 2 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: பல்கலைக்கழகத்தில் லிகிதர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ:G/12882 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : மகம் 1<br>கி.பா: சூரி. செவ் 7 இல் உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:Cima கணக்காளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்<br>தொ.இ: B/12858 | பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: சூரி 11 செவ் 10 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12883 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## சாம்பாரில் தங்கம்

கஞ்சியூரில் நஞ்சப்பன் என்ற ஏழை இருந்தான். அவன் தந்தை பணக்காரராகத்தான் இருந்தார். ஆனால் ஏதோ வியாபாரம் செய்து அதில் நஷ்டம் வரவே அவர் மனம் உடைந்து இறந்து போனார். அப்போது நஞ்சப்பனுக்கு நான்கு குழந்தைகள்.

அவனுக்கு அவ்வூரில் வேலை செய்து பிழைக்க முடியாமல் இருந்தது. அதுவரை கௌரவமாக வாழ்ந்துவிட்டு அதே ஊரில் கூலி வேலை செய்யப் பிடிக்கவில்லை.

அதனால் அவன் தன் மனைவி ம்க்களோடு வேறு ஊருக்குச் சென்றான். அங்கு என்ன கஷ்டப்பட்டு வேலை செய்த போதிலும் குடும்பம் நடத்தப் போதிய பணம் கிடைக்கவில்லை.

ஒரு நாள் நஞ்சப்பனுக்கு எந்த வேலையுமே கிடைக்கவில்லை. ஏற்கனவே அவன் பலரிடம் கடன் வேறு வாங்கி விட்டான். அதனால் யாரிடமும் கடன் கேட்கவும் முடியவில்லை. அவனுக்குப் பசியோ வயிற்றைக் கிள்ளியது. அன்றுதான் மனைவி மக்களுக்கு எப்படி சாப்பாட்டிற்கு வழி செய்வது என்ற கவலை வேறு சேர்ந்து கொண்டது.

அவன் ஊரெங்கும் திரிந்தபோது ஒரு பணக்காரர் வீட்டில் கல்யாணம் நடந்து கொண்டிருந்தது. சமையல் நடக்கும் இடத்தை மறைக்கத் தட்டி கட்டப்பட்டிருந்தது. சமையல் வாசனை நஞ்சப்பனின் மூக்கைத் துளைத்தது.

கல்யாண வீட்டிற்குள் நஞ்சப்பனால் வாசல் வழியாகச் செல்ல முடியாது. ஏனெனில் அவனது அழுக்கான கிழிந்த ஆடைகள் அவன் அக்கல்யாணத்திற்குச் சம்மந்தப்பட்டவனல்ல என்று காட்டிக் கொடுத்துவிடும்.

எனவே பின்புறமாகப் போய் சமையல் நடக்கும் இடத்தில் கட்டப்பட்ட தட்டி ஒன்றை விலக்கிக் கொண்டு யார் கண்ணிலும் படாமல் சென்றான்.

அங்கோ ஓரிடத்தில் இனிப்புத் தின்பண்டங்கள் செய்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றை எடுத்து நஞ்சப்பன் வாயில் போட்டுக் கொள்ளப் போனான். அப்போது யாரோ அங்கு வரவே அவன் சட்டென அங்கிருந்து பெரிய சாம்பார் அண்டாவின் பின்னால் ஒளிந்து கொண்டான்.


வந்தவள் சற்றப் பருமனான நடுவயதுப் பெண்மணி. அவள் அங்கும் இங்கும் பார்த்தவாறே சாம்பார் அண்டா அருகே நின்றாள் அப்போது சற்று தூரத்திலிருந்து யாரோ ஒருவர் "முத்தம்மா வரும்போது கத்தரிக்காய் கறிப் பாத்திரத்தை எடுத்துவா" என்று குரல் கொடுத்தார். முத்தம்மாவும் "இதோ கொண்டு வருகிறேன்.

என்று கூறிய வாறே தன் மடியிலிருந்து ஏதோ சிலவற்றை எடுத்துச் சாம்பார் அண்டாவினுள் போட்டாள்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## முடியாத ஊடல்



நிலைமையின் தீவிரம் மாதவிக்குப் புரிய ஒரு வாரம் ஆயிற்று ஒரு நாள் இரண்டு நாள் என்று நாட்கள் நகர்ந்தன கோவலன் வரவே இல்லை.ஒரு வாரம் ஆயிற்று பிரிவு அவளை வாட்ட ஆரம்பித்தது.

தான் குறும்பாகச் செய்த ஒரு காரியம் இப்படிப்பட்ட விளைவை உண்டாக்கும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை மாலைப் பொழுதுகள் அவளுக்கு நரக வேதனையைத் தந்தன. விரகம் வாட்டியது.

வருத்தத்திலும் சந்தோஷத்திலும் எப்போது அவளுடனே இருக்கும் தோழி வசந்தமாலைக்கு மாதவியின் வேதனை மிகுந்[illegible]லையை அளித்தது.

ஆனாலும், இதுமாதிரி நெருடலான விடயங்களில் தான் தலையி[illegible] என்கிற தயக்கத்தில் பேசாமல் இருந்தாள்.

வசந்தமாலை இன்றாவது அவர் வருவாரா? மாதவியே பேச்சை ஆரம்பித்தது நல்லதாகப் போயிற்று. தான் சொல்ல நினைத்ததை எல்லாம் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தாள் வசந்தமாலை.

நேற்றைக்கும் இன்றைக்கும் நடுவில் என்ன ஆகிவிட்டது? நேற்று வராதவர் இன்று எப்படி வருவார்? அன்று வராதவர் நேற்று வரை வரவில்லையே... இன்று மட்டும் என்ன மாற்றம்?

நிஜம்தான் தன் கேள்வியில் இருந்த பைத்தியக்காரத்தனம் மாதவிக்கு அப்போதுதான் உரைத்தது.

வசந்தமாலை நான் செய்தது தவறா?

ஆமாம்.

என்ன இப்படிச் சொல்கிறாய்? பின் எப்படிச் சொல்வது? அதெப்படி அவர் செய்ததைத்தானே நானும் செய்தேன்?

இருக்கலாம் ஆனால் அவர் ஆண் நீங்கள் பெண்.

பண்பு எல்லோருக்கும் பொதுவானது தானே? ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனிப் பண்பு நெறிகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் தான், உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும். – சீனப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருக்கோணேச்சரத்தை கபளீகரம் செய்யும் சதிவேலையை கைவிடுங்கள்

பாடல் பெற்ற திருக்கோணச்சரம் இலங்கை வேந்தன் இராவணனால் அமைக்கப்பட்ட சிவாலயம்.

கோணேச்சரப் பெருமானின் வரலாற்றினை அறிந்தவர்கள் அந்த ஆலயத்தின் தொன்மையைப் புரிந்து கொள்வர்.

நாயன்மார்களால் பாடப்பெற்ற இச்சிவத்தலம் இலங்கைத் திருநாடு சிவபூமி என்பதன் அடையாளமாக இருப்பதுடன் இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதன் சான்றாதாரம் என்பதும் இங்கு நினைவுபடுத்தற்குரியது.

ஈழத் தமிழர்களின் தாயகம் என்று நாம் பேசுவோமாக இருந்தால், திருகோணமலை அதன் தொடக்கப்புள்ளி என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

எனினும் வரலாற்றுத் தொன்மைமிகுந்த சிவாலயங்களையும் சிவாலயத்துக்குச் சொந்தமான நிலங்களையும் கபளீகரம் செய்கின்ற மிகப்பெரும் அநீதியை பௌத்த சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டுச் செய்து வருகிறது.

அந்தவகையில், திருகோணமலை கோணேச்சரர் ஆலயத்தின் வளாகத்தை உரிமை கொண்டாடும் தொல்லியல் திணைக்களம் ஆலய வளாகத்தில் பௌத்த விகாரைகளை நிறுவுவதையும் அங்கு சிங்களவர்கள் வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கும் அனுமதி வழங்கி சிவாலயத்துக்குரிய நிலத்தைக் கபளீகரம் செய்கின்ற கபடத்தனத்தை மேற்கொண்டு வருகிறது.

தொல்லியல் திணைக்களத்தின் இந்த நாசகார வேலை வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் உள்ள வரலாற்றுத் தொன்மை மிகுந்த அனைத்துச் சிவாலயங்களிலும் நடந்தாகிறது.

எனினும் இது குறித்த கருசனைகள், கவனயீர்ப்புகள் ஏதுமற்றவர்களாகத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக கிறிஸ்தவ தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுபற்றி பாராளுமன்றத்தில் ஒருபோதும் கதைப்பதில்லை.

அவர்களைப் பொறுத்தவரை சைவ சமயம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற மனநிலையோடு அவர்கள் இருப்பது தெரிகிறது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் திருகோணமலையை மறந்த கொழும்புத் தமிழராகிவிட்டார். இந்த நிலையில் சிவ சொத்தை தீண்டும் பாவகாரியம் நடக்கிறது.

இங்கு ஒன்றை மட்டும் சொல்ல முடியும். என்று ராஜபக்ஷ தரப்பு சிவாலயங்களில் கைவைத்ததோ அன்று அவர்களைப் பரிநாசம் தொட்டுக் கொண்டது.

இப்போது ஜனாதிபதி ரணிலின் ஆட்சியிலும் சிவ சொத்து அபகரிக்கப்படுமாயின், அதன் விளைவு மிக மோசமாக இருக்கும் என்பது மட்டும் சர்வநிச்சயம்.

# எதிர்காலத்தில் ரணில் அரசு நீதியைப் பெற்றுக் கொடுக்கும்

## போராட்டக்காரர்கள் நம்பிக்கை வெளியீடு

(கொழும்பு)

அரசாங்கம் எதிர்காலத்தில் போராட்டக்காரர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கும் என எதிர்பார்ப்பதாக காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

ரணிலின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அங்கு வருகை தந்த போராட்டக்காரர்கள் இதனைக் கூறியுள்ளனர்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீ வைத்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டதாக சட்டத்தரணி முதித்த திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வீடு கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி இரவு போராட்டக்காரர்களால் தீயிட்டு கொளுத்தப்பட்டது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களை 1 தொடக்கம் 9 வரை வரிசைப்படுத்தி, அதில் நான்கிற்கு உட்பட்டவர்களை விளக்கமறியலில் வைக்கவும் நான்கிற்கு மேற்பட்டோரின் விரல் ரேகைகளை பரீட்சிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு இந்த மாதம் 24 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கோப்பாயில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் நேற்று கைது

## 340 லீற்றர் கோடாவும் மீட்பு

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திருகோணமலையில் இருந்து வருகைதந்து நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 340 லீற்றர் (2 பரல்) கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நபரினை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,104)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவது நியாயமானது

## நீதியமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்குவது நியாயமானது என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் வெளிப்படைத் தன்மைக்காக தாம் சட்டமா அதிபரின் ஆலோசனைகளைக் கேட்டறிந்துள்ளதுடன், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிக்கையும் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியிடம் பரிந்துரை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க, நீதிமன்றத்தில் தாம் தெரிவித்த கருத்துக்கு வருத்தம் தெரிவித்து வாக்குமூலம் அளித்துள்ள நிலையில், அவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதே பொருத்தமானது என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதி செய்யுங்கள்

## பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

முட்டையின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கோரியுள்ளது.

இந்தியாவில் தற்போது முட்டை ஒன்றின் விற்பனை விலை இலங்கை நாணயப் பெறுமதியில் 18 ரூபாவாக உள்ள நிலையில் அங்கிருந்து முட்டையை இறக்குமதி செய்து இந்த நாட்டில் ஒரு முட்டையை 20 ரூபாவுக்கு வழங்குவது மிகவும் எளிதானது எனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது ஒரு முட்டையின் விலை 58- 65 ரூபா வரை விற்கப்படுகின்றது. எனினும் நியாயமான விலையில் விற்காமல் விற்பனையாளர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஆளுக்கு ஒரு விலையில் விற்கின்றதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே முட்டையை இறக்குமதி செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.(ம-7)

# எரிபொருள் பதுக்கல் 1,321 சந்தேகநபர்கள் இதுவரையில் கைது

(கொழும்பு)

இதுவரை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் சோதனையின்போது சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 155,502 லீற்றர் டீசல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுவரை நடத்தப்பட்ட பல்வேறு சோதனைகளில் 44,777 லீற்றர் பெற்றோல் மற்றும் 20,208 லீற்றர் மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மொத்தம் 1,387 சோதனைகளில், 1,321 சந்தேக நபர்கள் சட்டவிரோதமாக எரிபொருள் சேமிப்பு மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். (ம-7)

# பாணின் விலை, நிறை குறித்து ஆராய நடவடிக்கை

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ

பாண் இறாத்தலின் நிறை மற்றும் விலை குறித்து ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாண் இறாத்தலின் நிறை மற்றும் விலை தொடர்பான பிரச்சினைகள் உள்ளதாக தெரிவித்த அவர், கோதுமை மாவின் விலை அதிகரிப்புக்கு அமைய பாண் இறாத்தலின் விலை அதிகரிக்கப்பட்டதா என்ற கேள்வி உள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் கோதுமை மா, சீனி என்பனவற்றின் விலை அதிகரிப்பிற்கு ஏற்ப பணிஸ் விலை அதிகரிக்கப்பட்டதா என்ற கேள்வியும் உள்ளது. எனவே, இது குறித்து உடனடியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 48

பசுமைவாதிகள் கட்சி, மக்கள் ஜன நாயகக் கட்சி, முற்போக்கு சோசலிஸ்ட் கட்சி, மக்கள் கட்சி, உக்ரைன் தேசிய முன்னணி மற்றும் நமது உக்ரைன் ஆகியவை குறிப்பிடத்தக்க மற்றும் வலுவான இரண்டாம் இடத்தைப் பிடித்தன.

உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 450 ஆசனங்களில் மொத்தமாக 122 ஆசனங்கள் கிடைத்தன. இரண்டாம் இடத்தைப்பிடித்த உக்ரைனின் மக்கள் இயக்கம் (ருக்) கட்சிக்கு மொத்தமாக 46 ஆசனங்களே கிடைத்தன. தேர்தலுக்குப் பிறகு பாராளுமன்றத்தில் உருவான கூட்டணிகள் காலத்திற்கு காலம் மாற்றம் அடைந்திருந்தன. உக்ரைனின் மக்கள் இயக்கம் 1999 இல் இரண்டு வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிந்தன.

1998-2002 வரை 3 பிரதம மந்திரிகள் இருந்தார்கள். அவர்கள் மூவரும் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாவர்.

### உக்ரைனிய ஜனாதிபதி தேர்தல் - 1999

உக்ரைனில் 31 ஒக்டோபர் 1999 அன்று ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தலின் இரண்டாவது சுற்று நவம்பர் 14 அன்று நடைபெற்றது. இதன் பெறுபேறாக பெட்ரோ சிமோனென்கோவை (Petro Symonenko) தோற்கடித்த லியோனிட் குச்மாவுக்கு வெற்றி கிடைத்தது.

தேர்தல் நேரத்தில் உக்ரைனில் மக்கள் தொகை 50,105,600 ஆக இருந்தது. 34,017,400 பேர் நகரங்களில் வாழ்ந்தனர். அதிக மக்கள்தொகை கொண்ட மாவட்டங்களில் டொனெட்ஸ்க் மாநிலம் (23 தேர்தல் மாவட்டங்கள்) இருந்தது. செர்னிவ்சி மாநிலத்தில் மட்டுமே குறைந்த தேர்தல் மாவட்டங்கள் (4) இருந்தன. கீவ் நகரத்தில் 12 தேர்தல் மாவட்டங்களும் செவஸ்டோபோலில் 2 தேர்தல் மாவட்டங்களும் தேர்தல் நேரத்தில் உக்ரைனில் வாக்களிக்க முடியாத வாக்காளர்களுக்காக நாட்டிற்கு வெளியே ஒரு சிறப்பு மாவட்டமும் இருந்தன.

உக்ரைன் ஜனாதிபதி வேட்பாளர்களாக 32 பேர் பதிவு செய்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தனர். அவர்களில் 19 பேரின் விண்ணப்பங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உக்ரைன் மத்திய தேர்தல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மீதமுள்ள 13 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. கடைசியில் 13 வேட்பாளர்களே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டனர்.

தேர்தலின் முதல் சுற்றில் லியோனிட் குச்மா வெளிநாட்டு மாவட்டம் உட்பட அதிக மாவட்டங்களில் வெற்றி பெற்றார். ஏழு பிராந்தியங்களில் பெட்ரோ சிமோனென்கோ பெரும்பான்மை பெற்றார். அவர் உக்ரைனின் மையத்திலும் தெற்கிலும் முதன்மை பெற்றிருந்தார். ஒலெக்சாண்டர் மோரோஸ் அதிக விவசாயம் சார்ந்த பொல்டாவா மற்றும் வின்னிட்சியா மாநிலங்களில் காணங்களில் முதன்மை பெற்றிருந்தார். நடாலியா விட்ரென்கோ சுமி பிராந்தியத்தில் வேட்பாளர் பட்டியலில் உச்சத்தை எட்டினார்.

இத் தேர்தலின் முதலாம் சுற்றில் வாக்களிக்க 37,498,630 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 26,305,198 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 1,038,749 ஆகும். வாக்களிப்பு வீதம் 70.10% ஆகும். தேர்தலின் முதலாம் சுற்றில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட லியோனிட் குச்மா 9,598,672 வாக்குகள் (36.49%) பெற்று முதலிடத்திலும் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பெட்ரோ சிமோனென்கோ 5,849,077 வாக்குகள் (22.24%) பெற்று இரண்டாம் இடத்திலும் இருந்தனர்.

எல்லா வேட்பாளர்களுக்கும் எதிராக வாக்களித்தவர்கள் 477,019 ஆகும். எவரும் அறுதிப் பெரும்பான்மை (50%க்கு மேல்) பெறாத காரணத்தால் இரண்டாம் சுற்றுத் தேர்தல் மேற்கூறப்பட்ட இரு வேட்பாளர்களுக்கு மிடையே நடைபெற்றது.

இரண்டாம் சுற்றில் வாக்களிக்க 37,680,581 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 28,212,484 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 706,161 ஆகும். வாக்களிப்பு வீதம் 74.9% ஆகும்.

இவர்கள் இருவருக்குமிடையே நடந்த இரண்டாம் சுற்றுத் தேர்தலில் லியோனிட் குச்மா 15,870,722 வாக்குகள் (56.25%) பெற்று முதலிடத்தையும் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பெட்ரோ சிமோனென்கோ 10,665,420 வாக்குகள் (37.8%) பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

அதன் பிரகாரம் லியோனிட் குச்மா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இவர்கள் இருவருக்கும் எதிராக வாக்களித்தவர்கள் 970,181 ஆகும். வரலாற்றாசிரியர் செர்ஹி யெகல்ச் சிக்கின் (Serhy Yekelchyk) கருத்துப்படி, ஜனாதிபதி குச்மாவின் நிர்வாகம் தேர்தலின் போது "தேர்தல் மோசடிகளை சுதந்திரமாகப் பயன்படுத்தியது" என்பதாகும்.

உக்ரைனில் சுதந்திரத்திற்குப் பிந்தைய சமூகம் சில நேர்மறையான முன்னேற்றங்களைக் கண்டது. ஊடகங்கள் மிகவும் வெளிப்படையாகவும் துடிப்பாகவும் மாறியது. இருப்பினும் நிர்வாகத்தை வெளிப்படையாக விமர்சித்தவர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகினர், குறிப்பாக குச்மாவின் ஜனாதிபதியாக இருந்த போது (1994-2005).

(தொடரும்)

# ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட உக்ரைன் விமானத்தளத்தில் அடுத்தடுத்து குண்டு வெடிப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு பகுதியான கிரிமியா விமானத் தளத்தில் அடுத்தடுத்து சக்தி வாய்ந்த குண்டுவெடிப்பு சம்பவங்கள் நடந்துள்ளது.

முன்னாள். சோவியத் யூனியனில் இருந்த உக்ரைன் நாட்டின் ஒரு பகுதியான கிரிமியா ரஷ்யாவுடன் சமீபத்தில் இணைக்கப்பட்டது. இதையடுத்து, கிரிமியாவில் உள்ள கடற்படை மற்றும் விமான தளங்களையும், ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் இணைக்கப்பட்ட கிரிமியன் தீபகற்பத்தில் உள்ள கடலோர ரிசார்ட்டுகளுக்கு அருகில் உள்ள ரஷ்ய விமானத்தளத்தில் அடுத்தடுத்து சக்தி வாய்ந்த குண்டுவெடிப்பு சம்பவங்கள் நடந்துள்ளன.

இந்த சம்பவத்தில் ஒருவர் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது. குண்டு வெடிப்பு சம்பங்களால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தொடர் குண்டு வெடிப்பு காரணமாக அங்கு விண்ணை முட்டும் அளவிற்கு புகை மூட்டம் காணப்படுகிறது.

உக்ரைனிலிருந்து நீண்ட தூர ஏவுகணைகள் அதன் மீது ஏவப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. ஆனால் இது சேமித்து வைக்கப்பட்டிருந்த வெடி மருந்துகளை வெடிக்கச் செய்த தால் ஏற்பட்ட சம்பவம் எனவும் தாக்குதலின் விளைவு அல்ல எனவும் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

11.08.2022
ஆடி 26, வியாழக்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 10.20 மணிவரை

உத்தராடம் காலை 7.05 மணிவரை
திருவோணம் -பின்னிரவு 5.35 மணிவரை
சுப நேரம் -7.34-9.04 மணிவரை

இராகு காலம் -1.34-3.04 மணிவரை
பூரணை விரதம்
சந்திராஷ்டமம்-திருவாதிரை

வளவன்




பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.




எந்தக் காரியத்திலும் நிதானமாக செயற்படுவது நல்லது,வரைவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.




நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்புக் கிடைக்கும் பயணங்களால் புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்,வருமானம் திருப்தி தரும்.




தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்,சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்,தொழில் போட்டிகள் மாறும்.




மனநிறைவு கூடும் நாள், தொழில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.




காலை நேரத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.




வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள், எடுத்த காரியங்களில். முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.




ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்,போசன சுகமுண்டு.




சாப்பிடக் கூட நேரமில்லாது வேலைகளைச் செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.




நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,பொதுவாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு.

யாரையும் எளிதாக நம்பாதே, யாரையும் எளிதாக சந்தேகப்படாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்வெட்டு...

அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் ஒரு மணிநேரம் மின்வெட்டை அமுல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னநாயக்க தெரிவித்தார்.

மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையான காலப்பகுதிக்குள் இவ்வாறு ஒரு மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## 9 பேர்...

கோவிட் தொற்றினால் மேலும் 9 பேர் மரணமாகியுள்ளனர்.

இதில் 4 ஆண்களும் 5 பெண்களும் அடங்குகின்றனர்.

இதனையடுத்து இலங்கைக்குள் கோவிட் தொற்றினால் மரணமானோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 603 ஆக உயர்ந்துள்ளது. (ம-7)

## ரணில்...

விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீடு எரிக்கப்பட்டதில் 205 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

வீட்டிற்கு தீ வைத்ததன் மூலம் 14 மில்லியன் ரூபாயும் ஜனாதிபதியின் மகிழுந்தை எரித்ததன் மூலம் 191 மில்லியன் ரூபாயும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதென குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது. (ம-7)

## நாடு செல்லும்...

துவத்தைப் பெரும்பான்மையான மக்கள் எந்தத் தயக்கமும் இன்றி ஏற்றுக் கொள்வார்கள்."

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவாலை எதிர்கொள்ள அச்சமின்றி முன்வந்த யுக புருஷர். அவர் தனது அரசியல் எதிர்காலம் பற்றியோ, வேறு விடயங்கள் குறித்தோ பேசாது சவாலைப் பொறுப்பேற்றார்.

தற்போது நாட்டின் பிரச்சினைகள் சிறிது சிறிதாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாடு செல்லும் திசை மிகத் தெளிவானது" என்றார். (ம-7)

## 22வது திருத்...

போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பாராளுமன்றத்...

பாராளுமன்றில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்திலும் சபா பீடத்திலும் பொதுச் சொத்துச் சட்டம் செல்லாது என்ற தவறான கருத்து நேற்று முன்தினம் வெளியிடப்பட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், குற்றவியல் சட்டம் இந்த சபையில் செல்லுபடியாகாதா? என்பதை சபாநாயகர் அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள அதிகாரங்கள் குறித்து நாட்டையே தவறாக வழிநடத்தும் சம்பவமொன்று இடம்பெற்றது.

52 நாள் ஆட்சிக் கவிழ்ப்பு சதித்திட்ட காலப்பகுதியில் சபையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளர் வழங்கிய கருத்து குறித்து சபாநாயகர் விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கோரினார். (ம-7)

## இலங்கை நுழை...

பில் பதிலளிப்பதை தவிர்த்துக் கொள்வதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

இந்தக் கப்பல் தொடர்பில் இந்தியாவின். நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் நேற்று வினவிய போதே, இந்திய உயர்ஸ்தானிகராலயம் இதனைக் கூறியது.

இலங்கைக்கு பயணிக்கும் கப்பலை தாமதப்படுத்துமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் தூதரகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் அதற்கு எவ்வித காரணங்களையும் கூறியிருக்கவில்லை.

Yuan Wang 5 ஆய்வுக்கப்பல் நேற்றுப் பிற்பகல் வேளையிலும் கடலில் பயணித்துக் கொண்டிருந்தது. அம்பாந்தோட்டையில் இருந்து 600 கடல் மைல் வரை நேற்று முன்தினம் இந்த கப்பல் நெருங்கியிருந்தது.

எனினும் நேற்று முன்தினம் இரவு திடீரென இந்த கப்பல் வேகத்தைக் குறைத்து அந்தமான் தீவு நோக்கி திசை திருப்பியமையைக் காண முடிந்தது. நேற்று அதிகாலை மீண்டும் திசையை மாற்றி Yuan Wang 5 கப்பல் பயணிக்கிறது. (ம-7)

## உச்ச கொதிநிலை...

இந்தியாவின் கடுமையான எதிர்ப்பை மீறி சீனாவின் ஆய்வுக்கப்பல் இலங்கை நோக்கி பயணித்து இன்று நாட்டை வந்தடையலாம்.

இதேவேளை இலங்கைக்கு உள்ளூர் தயாரிப்பான டோர்னியர் உளவு விமானத்தை வழங்க இந்தியா திட்டமிட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வரும் நிலையில் இந்த மாத நடுப்பகுதியில் குறித்த விமானம் இலங்கைக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒகஸ்ட் 11ஆம் திகதியன்று இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரவிருந்த சீன உளவு கப்பலான யுவான் வாங் 05 க்கு இந்தியா ஏற்கெனவே தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து அந்தக் கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு இலங்கை, இந்தியாவிடம் ராஜதந்திர ரீதியில் கோரியிருந்தது.

எவ்வாறாயினும் இதனை கடுமையாக ஆட்சேபித்துள்ள சீனா, இந்தியாவையும் எச்சரித்திருந்தது.

இந்தநிலையிலேயே தமது உளவு விமானமான டோர்னியர் 228 என்ற விமானத்தை இலங்கைக்கு இந்தியா வழங்கவுள்ளது.

டோர்னியர் - 228 உளவு விமானம், இந்தியக் கடற்படையால் போர்ப் பணிகள், கடல் கண்காணிப்பு மற்றும் ஏனைய பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையும் இந்த உளவு விமானத்தை கடல் கண்காணிப்பு மற்றும் பிற நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## எரிபொருள்...

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் கொக்குவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 40 வயதுடைய சொரூபன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளைக் கொண்டு சென்று கியூஆர் குறியீட்டை காண்பித்த அவர், திடீரென மயங்கிச் சரிந்து உயிரிழந்துள்ளார். (ம-7)

## 12 அபிவிருத்தி...

தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அந்த நிதியம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொண்டு வந்த இரண்டாவது முனைய விஸ்தரிப்புக்காக ஜப்பானிய தாய்சேய் நிறுவனத்துக்கான நிதியை ஜெய்க்கா நிறுத்தியதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா, ஜெய்க்கா நிறுவனம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஜப்பானின் 12 திட்டங்களுக்கான நிதியை இரத்துச் செய்துள்ளதாக குறிப்பிட்டார். (ம-7)


































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னத்தில் அறைந்த ஆசிரியரை பள்ளத்தில் தள்ளிவிட்ட மாணவன்

(கொழும்பு)

கம்பளை நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றின் ஆசிரியருக்கும் மாணவர் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில் இருவரும் காயமடைந்த நிலையில் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இரு நாட்களுக்கு முன் இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரியவருகின்றது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தரம் 13 இல் கல்வி கற்று வரும் குறித்த மாணவன் சம்பவ தினம் காலை தனது தலைமுடியை வளர்த்துக்கொண்டு வந்தார் என்று தெரியவருகின்றது. இதன்போது குறித்த ஆசிரியர் அது குறித்து மாணவனிடம் வினவியபோது இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர், மாணவனின் கன்னத்தில் அறைந்தார் எனவும். இதன் போது குறித்த மாணவன் ஆசிரியரை அருகேயிருந்த பள்ளத்தில் தள்ளிவிட்டார் எனவும் தெரியவருகின்றது. (ம-7)

# ரூ. 5 ஆயிரம் போலி நாணயத்தாள் மோசடி யாழில் ஒருவர் கைது

இளவாலை மற்றும் தெல்லிப்பளை பொலிஸ் பிரிவுகளில் உள்ள கடைகளில் 5 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களைக் கொடுத்து ஏமாற்றிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை பன்னாலையைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை மற்றும் இளவாலை பொலிஸ் பிரிவுகளில் உள்ள கடைகளுக்கு அண்மையில் சென்ற ஒருவர் 5 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களை வழங்கி பொருள்களை வாங்கிவிட்டு மிகுதிப் பணத்தை பெற்றுச் சென்றுள்ளார்.

போலி நாணயத்தாள்கள் என அறிந்த கடைக்காரர்கள் இருவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாடுகள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய புலனாய்வு பிரிவின் தகவலின் அடிப்படையில் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் 27 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

போலி நாணயத்தாள்களை அச்சிடப் பயன்படுத்திய உபகரணங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டார். சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-7)


## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(12378)

076 490 5403, 076 491 2493, 076 490 6029

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

## மணமகன் தேவை

யாழ். இந்து, 1991, மூலம் 1 ஆம் பாதம், செவ்வாய் 06 இல் (குற்றமில்லை) கிரகபாவம் 32 1/4, அரச பணிபுரியும் மணமகளிற்கு பொருத்தமான வரன் தேவை.

(12409)

077 616 1739

## வேலை வாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel And Indian Restaurants இற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு (12396)

076 830 3931


# நிர்வாகக்...

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் பல தரப்பினருடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் குழுவினர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ளன.

பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுவை நியமிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக இதன்போது தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் சில இடைக்கால குழுக்களை அமைக்க வேண்டியதன் அவசியத்தை கண்டறிந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பேரவையை உருவாக்குவதே பிரதான இலக்கு என சுட்டிக் காட்டிய அவர், அதற்காக அனைத்து கட்சிகளின் பிரதிநிதித்துவமும் ஏனைய கட்சிகள் மற்றும் குழுக்களின் முழுமையான பிரதிநிதித்துவமும் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

குழுத் தலைவர்களுக்கு சமமான அதிகாரம் மற்றும் பிரதிநிதித்துவம் வழங்குவதன் முக்கியத்துவத்தையும் ரணில் விக்கிரமசிங்க விளக்கியுள்ளார். (ம-7)


## சிறுநீரகம் தேவை

25 வயதுடைய ஆண் ஒருவருக்கு B/O குருதி வகையுடைய சிறுநீரகம் தேவை. (45 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(12400)

077 311 9361

## வேலையாட்கள் தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் தேவை. ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு (C-4723)

076 619 6978


## அறிவித்தல்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு சொந்தமான வடக்குவெளி வயற்காணி காலபோக நெற்செய்கைக்காக குத்தகைக்கு வழங்கும் கருமம் எதிர்வரும் 16.08.2022 (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு ஆலய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெறும் என்பதனை தெரியப்படுத்துகின்றோம்.

(C-4726) -நிர்வாகத்தினர்


## கோழிக்கூடு விற்பனைக்குண்டு

15 கோழிகள் வளர்க்கக்கூடிய 2 தட்டு கோழிக்கூடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (12401)

077 420 6382


## மரண அறிவித்தல்

திருமதி

# பாலச்சந்திரன் கனகாம்பிகை

பிறப்பு 1943.02.20 | இறப்பு 2022.08.10



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் கனகாம்பிகை அவர்கள் நேற்று (10.08.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு - அன்னலெட்சுமி தம்பதிகளின் மூத்த மகளும் குமாரசாமி - மீனாட்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கமலாதேவி, ஞானாம்பிகை, திலகவதி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற யோகநாதன், சிவசுந்தரராஜா, காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் துவாரகாவின் பாசமிகு தாயாரும் சக்திதாசன் அனிதாவின் பெரியம்மாவும் பௌர்ணமி, பர்னவி, பாகவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

C.C.T.M லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(12407)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.